தேவி துணை

# அபிராமி அந்தாதி ஆய்வுரை

(முப்பத்தேழாவது பாடல்)



நீதி உயர்ந்த மதிகல்வி அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்

திரு வே. இராமநாதன் அவர்களின்
(இளைப்பாறிய கலால் இலாகா சார்ஜன்ட்)
நினைவாக வெளியிடப்பட்டது.

✲ இப்பாடலின் பயன்; விருப்பங்கள் நிறைவேறுதல். ✲

வெளியீடு:
பஜனைச்சபை
வழக்கம்பரை, சுழிபுரம்.
1993

உ

சிவமயம்

# வணக்கம்

இன்று அபிராமிப் பட்டர் தினமாகும். தை அமாவாசை யல்லவா. இந்நாளில் எம் பணியைச் செய்ய அருள்நல்கிய அம்பிகையை நாம் வணங்குகின்றோம்

அபிராமி அந்தாதி முப்பத்தாறாவது பாடல் வெளியீடு 08-01-1993 திருவாதிரை அன்று அதிகாலை வழக்கம்பரை அம்பாளின் பாதத்தில் வைத்து வெளியிடப்பட்டது அடுத்த முப்பத்தேழாவது பாடலை மிக விரைவில் அதாவது பதினைந்து தினங்களுக்குள் வெளியிட எமக்கு திருவருள் கிடைத்த சம்பவத்தை சற்று விரிவாக இங்கு கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

சுழிபுரம் கிழக்கு அமரர் திரு. வே. இராமநாதன் அவர்களின் அன்பு மகன் இ. தவராசா அவர்கள் எம்மிடம் வந்து தந்தையாரின் நினைவாக அபிராமியந்தாதி 37 வது பாடலை வெளியிட வேண்டும் அப்பாடல் ஆய்வுரையை எம்மிடம் தாருங்கள் என வேண்டினார். இப் பாடலின் பயன் விருப்பங்கள் நிறைவேறுதல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது இப்பாடலை அச்சிட விரும்பியவர் விருப்பம் நிறைவேறுவது போல் எங்கள் பணியும் நிறைவேற வாய்ப்பாகவுள்ளது. எல்லாம் அம்பாளின் அருட் சடாச்சமாகும்.

அம்பிகை முத்துமாலையினை விரும்பி அணியும் சிறப்பினை இன்று வெளியிடப்படும் பாடல் கருத்தை வாசிக்கும் போது நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

அமரர் திரு. வே. இராமநாதன் குடும்பத்தினர் எங்கள் வெளியீடுகளுக்கு நல்லாதரவு தந்து ஆதரிப்பதும் எம்மிடம் பல நூல்களை பணம் கொடுத்து வாங்கி ஆதரவு நல்கியதை நாம் மறப்பதற்கு இல்லை அமரர் வே இராமநாதன் அவர்களின் அருமை மனைவியார் தம்வாழ்வில் ஒரு ஏற்ற கணவனைப் பெற்று சிறப்புடன் வாழ்ந்துள்ளார். அம்மையார் இதுவே தம் வாழ்வில் பெற்ற பேறாகும்

(மிகுதி கடைசிப் பக்கம்)

உ

சிவமயம்

# அபிராமி அந்தாதி ஆய்வுரை

## செய்யுள்: 37

புலவர் க. சந்தானராமன் எம். ஏ. அவர்கள்

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விட அரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்பவளே

### அ. எட்டுத் திக்கே அணியும் திருவுடையான் இடம் சேர்பவளே.

1. எட்டுத்திசைகளையே ஆடையாக உடுக்கும் ஐசுவரியத்தையுடையவனான இறைவனின் இடப்பாகத்தில் சேர்ந்து விளங்குபவளே என அழைக்கிறார்.

2. எங்கும் நீக்கமற நிறையும் இறைவனுக்கு எதுதான் ஆடையாக முடியும்? நிலமகளுக்கு கடலே ஆடை என்பது போல, இறைவனுக்கு எட்டுத் திசைகளே ஆடையாகின்றன. திக்குகளை தனக்கு ஆடையாகக் கொண்டதால் ஈசனுக்கு ' திகம்பரன்'' என்னும் பெயர் உண்டாயிற்று.
(திக்—திசை, அம்பரம்—துணி அல்லது ஆடை)

ஆடையில்லாத துறவிகளை (அவதூதர்களை) திகம்பர சாமியார் என்று அழைக்கும் வழக்கம் உண்டாயிற்று.

3. மும்மறைகளுள் இரண்டாவதாகிய ''யசுர்'' வேதத்தின் நடுப்பகுதியாகிய ''ஸ்ரீ ருத்ரம்'' இறைவனைத் ' திகம்பரன்'' எனக்குறிப்பிடுகிறது.

4 ' சென்றடையாத திருவுடையான்'' என இறைவன் திருமுறைகளால் போற்றப்படுகிறான் அவ்வவர் நல்வினை, தீவினைகளுக்கேற்ப சென்று அடைவதும், விட்டுச் செல்வதும் ஆகிய இயல்பினை உடையது திரு. ஆனால் அவற்றுக்கு அப்பாற்பட்ட இறைவன் சென்றடையாத உண்மைத் திருவினை உடையவன் ஆதலின், திருவுடையான் என்றார்.

5. ''சாஸ்வத ஐச்வர்யா'' என்ற சகஸ்ரநாமம் அன்னையும் நிலையான திருவுடையவள் என்பதனைக் குறிப்பிடுகிறது எனவே அத்திருவுடையாள் திருவுடையானையே சேர்ந்திருக் கிறாள். வேறு ஆடைகள் இன்றி திசைகளையே அணியும் திகம்பரன் ஆயினும் அவன் உண்மையான திருவுடையான் என்பதை அறிந்ததேவி அவனைச் சேர்ந்திருக்கிறாள்.

6. பேராசிரியர் உரையில் திரு என்பது ''கண்டாரால் விரும் பப்படும் தன்மை'' என்பார். மற்றச் செல்வங்கள் நிலை யானவையும், உண்மையானவையும் அல்ல; இறைவன் ஒரு வனே வீடென்னும் செல்வத்தைத் தரவல்ல மெய்யான செல்வன் என்பதனை ஞானிகள் காண்கின்றனர்.
''செல்வாய செல்வன்'' என்று அவனைத் திருமுறைகள் போற்றுகின்றன.

வீட்டின்பமாகிய செல்வத்தினை தரவல்லவன் அவன என்பதனைக் கண்டவர்கள், விரும்பு ''திரு'' அவனே ஆவான் என்று உணர்வர் அவ் உண்மை நிலை கண்டாரால் விரும் பப்படும் தன்மையுடைய இறைவனை, அன்னை விரும்பி இடம் சேர்ந்தாள் என்பதில் வியப்பில்லை.

7. ஆலேபனம் பஸிதமாவஸதச் ச்மசானம்
அஸ்தினிதே ஸததமா பரணா நிஸந்து
நின்ஹோது மீசநிகல ச்ருதி ஸராஸித்தம்
ஐச்வர்ய மம்புஜப வோபிசந க்ஷமஸ்தே''

''சாம்பலைப் பூசி சுடுகாட்டில் வசித்து, எலும்பு மாலை பூண்டு நீ ஏழைக் கோலத்தைப் பிரகடனம் செய்தாலும் சகல வேதங்களாலும், உபநிதத்துக்களாலும், தீர்மானமாய் கோஷிக்கப்படும் உன் ஐசுவரியத்தை மறைக்கும் திறமை, பிரமதேவனுக்கும் கிடையாது'' என்ற கருத்தினை ஸ்ரீமத் அப்பைய தீட்சிதர் அவர்கள் இயற்றிய ஆத்மார்ப் பணஸ்துதி என்னும் நூலில் மேற்கண்ட ஸ்லோகத்தில் குறிப்பிடுகிறார்.

8. அத் திருவுடையானின் திருவடிகளே நம்மால் அறிய முடி யாமல் மறைந்து கிடக்கும் உண்மையான புதையல் என்று வர்ணிக்கிறது சிவானந்த லகரி.

திகம்பரன் ஆனாலும் அவன் திருவுடையவன் தான் என்பதனை வலியுறுத்த அபிராமிப்பட்டரும் 'திக்கே அணி யும் திருவுடையான்'' என்றார்.

## அ. கைக்கே அணிவது கன்னலும் பூவும்.

1. உமது திருக்கரங்களிலே அணிவது கரும்பு வில்லும் மலர் அம்புகளும் ஆகும்.
(கன்னல் — கரும்பு)

2. ஸ்ரீ வித்தியா முறையில் பூஜை செய்வோர் செய்ய வேண்டிய அறுபத்து நான்கு உபசாரங்களில் கரும்புவில் "புஸ்ப பாணம்" அணிவித்தலும் அடங்கும்.

திருக்கடவூரில் அபிராமி அம்பிகைக்கு அலங்காரம் செய்யும் பொழுது கரும்புவில்— மலரம்பு அணிவிப்பதனை இன்றும் காணலாம்.

3. கரும்புவில் — மலரம்புகள் இவற்றின் வரலாறு அவை உணர்த்தும் தத்துவார்த்த விளக்கங்கள் ஆகியவற்றினை "துணையும் தொழும் தெய்வமும்" என்ற பாடலின் விரிவுரையில் கண்டோம்.

## ஆ. கமல மன்ன மெய்க்கே அணிவது வெண் முத்துமாலை

1. தாமரையின் பேரம்புகளை யொத்த திருமுலைகளின் மீது அணிவது வெண்மையான முத்துமாலையாகும்

2. அம்பிகை கழுத்தில் அணிபவை மூன்று அணிகலன்கள் என்று சகஸ்ரநாமம் கூறுகிறது. அவை
   1 கழுத்தை யொட்டிய அட்டிகை
   2 அதைச்சுற்றி சங்கிலியில் தொங்கும் பதக்கம்
   3. அதற்கு வெளியில் அணியும் பெரிய முத்துமாலை

கழுத்தளவே நினைக்கும் அடியார்.
சலன புத்தியுடைய அடியார், முத்திநெறியுணர்ந்த பழுத்த அடியார்களை முறையே இம் மூன்று அணிகலன்களும் உணர்த்தி நிற்பதாக உரையாசிரியர்கள் விளக்குகின்றனர்.

3. வடமொழி நூல்களும் அம்பிகை முத்துமாலை அணியும் சிறப்பினைப் புகழ்கின்றன.

தமிழ் நாட்டிற்கே உரித்தான முத்துமாலையினை அம்பிகை விரும்பி அணிகிறாள் என்பது தெளிவு.

அம்பிகை முத்துமாலையினை முக்கிய அணிகலனாக அணிகிறாள் என்ற செய்தி, சக்திவழிபாடு தமிழருக்குரியது என்பதனை நிறுவ ஒரு முக்கிய சான்றாக அமைகிறது.

4. தனது குழந்தை முருகனை அணிகலன்களால் அழகுபடுத்தி அலங்கரிக்க விரும்புகிறாள் அம்பிகை. ''புள்ளிருக்கு வேளூர்' என்று புகழப்படும் வைத்தீஸ்வரன் கோயிலில் அவனுக்கு அனேக முத்துச் சரங்களை அணிவிக்கிறாள். முன்கையில் பின்கையில், தோழில், கழுத்தில், சடையில், இடையில் திருவடியில் என்று எங்கும் முத்துச் சரங்களினாலேயே' அலங்கரிக்கிறாள் அம்பிகை.

அன்றிலிருந்து ''குமாரசாமி'' ''முத்துக்குமாரசாமி'' ஆகிவிடுகிறார்.
''முருகையன்'' ''முத்தையன்'' ஆகிவிடுகிறார்.

இவ்வரலாறு அம்பிகைக்கு முத்துமாலையில் இருக்கும் விருப்பத்தினை நன்கு விளக்குகிறது

5. ''முத்தாவணி'' என்னும் முத்துமாலை அணிவித்தலும் அறுபத்து நான்கு உபசாரங்களில் ஒன்று.

## ஈ. விடஅரவின் பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும்

1. நஞ்சை உடைய பாம்பின் படம் போன்ற மறைவிடத்தில் அணிவது பலவகை மணிக்கோவையும், பட்டாடையும் ஆகும்

2. பெண்களின் மறைவிடம் பாம்பின் படம்போல இருக்கின்ற தென வர்ணிப்பது கவி மரபு. மற்றும் ''சாமுத்திரிகா இலட்சணமும்'' ஆகும். ''நல்லரவின் படங் கொண்ட அல்குல்'' என்பர் பின்னும்.

3 பட்டாடை அணியும் இடையில் ''காஞ்சி'' என்னும் ''மேகலை'' அல்லது ஒட்டியாணம். ''கடிசூத்திரம்'' என்னும் அரைஞாண், ''சௌபாக்கியாபரணம்'' என்னும் ''அர சிலை'' ஆகிய அணிகலன்களை அணிவிக்க வேண்டு மென் பது அறுபத்து நான்கு உபசார விதியுள் அடங்கும்.

அவ்வாபரணங்கள் பல மணிகள் கோர்க்கப்பட்டும், வைத்திளைக்கப்பட்டும் உருவாக்கப்படுகின்றன. எனவே ''பன்மணிக்கோவை'' என்றார்.

4. அன்னையின் ''மந்திரமயமான சரீரம்'' மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். அவற்றுள் கழுத்திலிருந்து இடை வரையுள்ள பகுதி ''மத்ய கூடம்'' எனப்படும். இச்சா சக்தி வடிவாகி, விருப்பம் வெளிப்படும் அப்பகுதியின் ''அர்ச்சா மூர்த்தம்'' இங்கே வர்ணிக்கப்படுகிறது.

''விருப்பங்கள் நிறைவேறுதல்'' இப்பாடலின் பொதுவான பாராயண பலன் ஆகும்.

''பெண்களுக்கு ஏற்ற கணவன் அமைதல்'' சிறப்பான பாராயண பலன் ஆகும்.

---

எங்கள் பணிக்கு ஆதரவு நல்கி 37 வது பாடலை அச்சிட்டு யாவரும் பயன்பெற உதவியமைக்கு நாம் அமரர் வே. இராமநாதன் குடும்பத்தினருக்கு நன்றி கூறுகின்றோம். எம்மால் முன்பு வெளியிடப்பட்ட அபிராமியந்தாதி ஆய்வுரைகள் தேவையானவர்கள் எம்மிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். அமரரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்தித்து அம்பாளை வணங்குவோம்.

''பஜனைச்சபையார்''

வழக்கம்பரை
சுழிபுரம் 22-01-1993

